
ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 2 | செப்டம்பர் 1996 | கானம் : 2

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளீ


(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 2 செப்டம்பர் 1996 கானம் : 2

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 10 | 4 |
| 3. | ஸ்ரீ வேங்கடேஸ்வர சுப்ரபாதமும், உரையும்-3 | 5 |
| 4. | வனவாஸத்தில் ஸ்ரீ ராமபிரான் பரதனிடம் தொடுத்த வினாக்கள் | 9 |
| 5. | ஸ்ரீ குருஜியின் உபன்யாஸத்திலிருந்து | 17 |
| 6. | கனி கண்ணன் கதை - 3 | 19 |
| 7. | ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து-13 | 26 |
| 8. | ரஸ ரூபமானது பக்தியே | 28 |
| 9. | செய்திகள் | 32 |
| 10. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |


**All Photographs : S. Sridhar**



'கோகுலாஷ்டமி' ப்ரம்மோத்ஸவ
வைபவத்தில் ஒரு காட்சி

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம்

ராகம் : ஸிந்து பைரவி தாளம் : ஆதி

பல்லவி

*லக்ஷ்மீ வராஹம் பஜரே - மானஸ (லக்ஷ்மீ)*

சரணங்கள்

*அங்குஷ்ட ஸ்வரூபாத் க்ஷணமாத்ரே விராட் ஸ்வரூபம்*
*யோக சரீரம் மோஹன ஸ்வரூபம்*
*ஹிரண்யாட்ச ஹரணம் ஸ்ருதி ஸம்ரட்சணம்*
*யக்ஞஸ்வரூபம் பூவராகம் (லக்ஷ்மீ)*

*க்ஷீராப்தி புத்ரீ ஆலிங்கன கரம்*
*க்ஷாராப்தி பஞ்சனம் தத்வோபதேச ப்ரதம்*
*குஞ்சித பாத ஸேவிதம் ஸஞ்சித பாப விநாசனம்*
*முரளீதர ஹ்ருதய தாபத்ரய ஹரணம் (லக்ஷ்மீ)*

Front Wrapper :

அன்றைய 'ப்ரேமிக பவனில்' (நிர்மாணம் ஆன புதிது), ஸ்ரீ ஸ்ரீனிவாஸப் பெருமாள் பிரதிஷ்டை செய்யப்பட்ட அன்று.

Back Wrapper :

இன்றைய 'ப்ரேமிக பவனில்' ச்ரவண தீபத்தன்று.

# 10

முதல் வருடம் (1994ம் வருடம்) கோகுலாஷ்டமி உத்ஸவம் மதுரபுரி ஆஸ்ரமத்தில் கொண்டாடுவதாக தீர்மானிக்கப்பட்டது. ஜனவரியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக மரம், பூச்செடிகள் எல்லாம் வைத்தல் என்று ஆரம்பித்து ஆஸ்ரம வேலை சிறுகச் சிறுக நடந்து வந்தது. பக்தர்கள் வந்து தங்குவதற்காக எட்டு அறைகள் கட்டப்பட்டன. பூஜைகள் நடைபெறுவதற்காக ஒரு பெரிய கீற்றுக் கொட்டகையும் அமைக்கப்பட்டது. ஸ்ரீ குருஜி அவர்கள் கோகுலாஷ்டமி உத்ஸவத்திற்காக வேலைகளை எவ்வளவோ துரிதப்படுத்தி நடத்தி வந்தார்கள். ஆனாலும் பக்தர்கள் வந்து தங்குவதற்காகக் கட்டப்பட்டுக் கொண்டிருந்த எட்டு அறைகளின் வேலை மட்டும் பூர்த்தியாகவில்லை.

அறைகளுக்கு ஒருவாறு தரையெல்லாம் போட்டாகிவிட்டது. ஆனால் மேலே (ceiling) மூட முடிய வில்லை. உத்ஸவமும் நெருங்கிவிட்டது. என்ன செய்வதென்று தெரியவில்லை. அந்த சமயம் அவ்வப்பொழுது மழையும் பெய்து கொண்டிருந்தது. என்ன செய்யலாம் என்று யோசித்து கடைசியில் Plastic Sheet ஐக் கொண்டு அந்த எட்டு அறைகளையும் உத்ஸவம் நடக்கும் வரை மூடி விடலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

வெகு ஜோராக கோகுலாஷ்டமி அன்று நந்தோத்ஸவம் முதல் ஆரம்பித்து எல்லா உத்ஸவங்களும் விமரிசையாக நடக்க ஆரம்பித்தன. உத்ஸவம் ஆரம்பிப்பதற்கு முன்பு அடிக்கடி மழையும் பெய்து வந்தது. ஆனால் அதிசயமாக இந்த 10 நாட்களிலும் மழை பெய்யவே இல்லை. அவ்வப்பொழுது இடியும் மின்னலும் வந்து மழை வந்து விடுவது போல் பயமுறுத்தும். ஆனால் மழை வரவே வராது. உத்ஸவ காலங்களில் மழை பெய்து இருந்தால் ஏற்பட்டிருக்கும் சிரமம் சொல்லி முடியாது.

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல் கடைசி நாள் காலையில் ராதா கல்யாணம் பூர்த்தியாகி, இரவு தெப்ப உத்ஸவம் நடந்து முடிந்தது. எங்கிருந்துதான் மேகங்கள் வந்ததோ தெரியாது. சோ என்று மழை சுமார் 1 மணி நேரம் பெய்தது. இந் நிகழ்ச்சி எல்லோருக்கும் பகவானே இந்த உத்ஸவத்தினால் மிகவும் ப்ரீதியடைந்து விட்டார் என்பதை உணர்த்தியது. ஸ்ரீ குருஜி பொறுப்பெடுத்து நடத்தி வரும் எல்லா நல்ல காரியங்களுக்கும் பகவான் அனுகூலமாக இருப்பது —ப்ரத்யக்ஷம்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

# ஸ்ரீ வேங்கடேஸ்வர சுப்ரபாதமும் உரையும் - 3

*ஸ்ரீ பத்மநாப புருஷோத்தம வாஸுதேவ*
*வைகுண்ட மாதவ ஜநார்தந சக்ரபாணே!*
*ஸ்ரீ வத்ஸசிஹ்ந சரணாகதபாரிஜாத*
*ஸ்ரீ வேங்கடாஜலபதே தவ சுப்ரபாதம். !!* 22

சரண் அடைந்தவர்களைக் கைவிடாதவனாகிய உன்னை, உன்னுடைய பல வகைத் திருநாமங்களைப் பிதற்றிக்கொண்டு உன் வாயிற் கடையில் நின்று உன் அருள் ஒன்றையே எதிர் நோக்கி நிற்கும் எங்களுக்கு அருளுவதற்காகத் துயிலெழுவாயாக.


குறிப்பு :- வாஸுதேவன் - எல்லா வஸ்துக்களிலும் வசிப்பவன். ஆயினும் குற்றமற்று விளங்குபவன். பாரிஜாதம் - தேவ லோகத்திலுள்ள ஐந்து தருக்களில் ஒன்று. மாதவன் - திருமகள் நாதன். ஜந அர்தநன் - ஜனங்களின் பிறப்பை நீக்குபவன். சக்ரபாணி - திருவாழியைக் கையில் தரிப்பவன், வைகுண்டன் - அழிவற்றவன்.

*கந்தர்ப்ப தர்ப்பஹரஸுந்தர திவ்ய மூர்த்தே*
*காந்தா குசாம்புருஹ குட்மல லோல த்ருஷ்டே !*
*கல்யாண நிர்மல குணாகர திவ்யகீர்த்தே*
*ஸ்ரீ வேங்கடாசலபதே தவ ஸுப்ரபாதம். !!* 23

உன் திருமேனியின் அழகில் ஈடுபட்ட திருமகளும் உன்னைத் துயிலெழ வொட்டாள். அவள் திருமலைத் தடங்களின் அனுபவத்தில் ஈடுபட்ட நீயும் துயிலெழாய். அவ்வாறின்றி அருள் முதலிய உன் குணங்களின் மேன்மையைப் பொய்க்காமல் துயிலெழுந்து அடியார்களை அருள்வாயாக.

*மீநாக்ருதே கமட கோல ந்ருஸிஹ்ம வர்ணிந்*
*ஸ்வாமிந் பரச்வததபோதந ராமசந்த்ர !*
*சேஷாம்சராம யதுநந்தந கல்கிரூப*
*ஸ்ரீ வேங்கடாஜலபதே தவ ஸுப்ரபாதம். !!* 24

நீ உலகுக்கெல்லாம் ஒரு தலைவன் ஆனமையின் பரம *பதத்தை விட்டிறங்கிப் பல அவதாரங்கள் எடுத்து உலகைத் தீங்கினின்றும் காப்பாற்றி நல்வழிப்படுத்தியதும், இனியும் கல்கி அவதாரம் எடுத்து நல்வழிப்படுத்தப் போவதும் முற்றிலும் தகுந்த செய்கை. உடைமையை



உடையவன் காப்பாற்றுவது பொறுப்பு. அத்தகைய நீ உன் கோயில் தேடி வந்து காத்திருக்கும் அடியார்களைக் காப்பாற்ற வேண்டும். துயிலெழுக.

குறிப்பு :– கல்கி அவதாரம் இனிமேல் கலி யுக முடிவில் ஏற்பட வேண்டும்.

*ஏலா லவங்க கநஸார ஸுகந்த தீர்த்தம்*
*திவ்யம் வியத்ஸரிதி ஹேம கடேஷு பூர்ணம் !*
*த்ருத்வாத்ய வைதிக சிகாமணய: ப்ரஹ்ருஷ்டா:*
*திஷ்டந்தி வேங்கடபதே தவ ஸுப்ரபாதம் !!* 25

வேத முறை தவருதொழுகும் ஸ்ரீ வைஷ்ணவ ப்ராஹ்மணர்கள் தங்கக் குடங்களில் ஆகாச கங்கையின் தீர்த்தத்தை நிரப்பி நல்ல மணமூட்டித் தலைகளில் எடுத்துக்கொண்டு உன் ஸந்நிதி வாயிலை யடைந்து உவகையுடன் காத்து நிற்கின்றனர். துயிலெழுக.

குறிப்பு :– வைதிக சிகாமணய:– திருமலையில் இன்றும் முதல் தீர்த்தம் பெற்று வரும் திருமலை நம்பிகள் வம்சத்தவர்களாகிய தோழப்பர்கள் இன்றும் ஆகாச கங்கா தீர்த்த கைங்கர்யம் நடத்தி வருகிறார்கள்.

*பாஸ்வாநுதேதி விகசாநி ஸரோருஹாணி*
*ஸம்பூரயந்தி நிநதை: ககுபோ விஹங்கா: !*
*ஸ்ரீ வைஷ்ணவா: ஸததமர்த்தித மங்களாஸ்தே*
*தாமாச்ரயந்தி தவ வேங்கட ஸுப்ரபாதம் !!* 26

பொழுது புலர்ந்துவிட்டது. நீ துயிலெழப்போகிறாய் என்று களிப்பன போல் பகுத்தறிவற்ற பறவைகளும் எழுந்து சிலம்புகின்றன. அறிவுணர்ச்சியற்ற தாமரை மலர்களும் மலர்கின்றன. அடியார்கள் மங்களா சாஸனம் செய்து கொண்டு வந்து நிற்கின்றனர். அடியவர்க்கெளியனை நீ இன்னும் உறங்குவது அழகன்று. துயிலெழுந்தருளுக.

*ப்ரஹ்மாதயஸ் ஸுரவராஸ்ஸமஹர்ஷயஸ்தே*
*ஸந்தஸ் ஸநந்தந முகாஸ்தவ யோகிவர்யா: !*
*தாமாந்திகே தவ ஹி மங்களவஸ்து ஹஸ்தா:*
*ஸ்ரீ வேங்கடாசலபதே தவ ஸுப்ரபாதம் !!* 27

நீ துயிலெழுந்ததும் உன் திருக்கண் மலர் திறந்து முதலில் பார்க்கத் தக்க கண்ணாடி முதலிய மங்களப் பொருள்களைக் கைகளில் ஏந்திக்கொண்டு நான்முகன் முதலியோர், கோயில் அருகில் (மறைவாக) நிற்கின்றனர். துயிலெழுந்தருளுக.

*லக்ஷ்மீ நிவாஸ நிரவத்யகுணைகஸிந்தோ*
*ஸம்ஸார ஸாகர ஸமுத்தரணைகஸேதோ !*
*வேதாந்தவேத்ய நிஜவைபவ பக்தபோக்ய*
*ஸ்ரீ வேங்கடாஜலபதே தவ ஸுப்ரபாதம் !!* 28

பக்தர்கள் உன்னைப் போக்யமாய் அனுபவிப்பது போல நீயும் அவர்களைப் போக்யமாய் அனுபவிப்பதுதலின் துயிலெழுந்து வாயிலில் காத்திருக்கும் பக்தர்களுக்கு அருள் தருக.

குறிப்பு :- நிர் அவத்ய குணைகஸிந்தோ-கடவுளிடத்தில் ஒரு குற்றமும் இல்லை குணங்கள் எல்லாம் உள்ளன. குற்றமின்மை (கல்யாண) குணங்கள் நிறைந்திருக்கை என்ற இவ்விரண்டும் உபய லிங்கம் (2 அடையாளங்கள்) என்று கூறப்படும்.

*இத்தம் வ்ருஷாஜலபதேரிஹ ஸுப்ரபாதம்*
*யே மாநவா: ப்ரதிதிநம் படிதும் ப்ரவ்ருத்தா: !*
*தேஷாம் ப்ரபாதஸமயே ஸ்ம்ருதிரங்கபாஜாம்*
*ப்ரஜ்ஞாம் பரார்த்தஸுலபாம் பரமாம் ப்ரஸூதே !!* 29

தினந்தோறும் காலை வேளையில் இத் திருப்பள்ளியெழுச்சியைப் படிப்பவர்களும் நினைப்பவர்களும் பரம்பொருளைப் பற்றிய நல்லறிவைப் பெறுகின்றனர்.

ஸ்ரீ வேங்கடேச ஸுப்ரபாதம் முற்றிற்று.

---

பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் "அருணாசல அக்ஷர மண மாலை'- ஸ்ரீ குருஜியின் உபன்யாஸக் கேஸட்டுகள் (இரண்டு பாகங்கள்) விலைக்குக் கிடைக்கும். 10 கேஸட்டுகள் கொண்ட ஒவ்வொரு பாகமும் ரூ. 200/- V.P.P.யில் அனுப்ப ஒவ்வொரு பாகத்திற்கும் ரூ.50/- கூடுதல் .

**தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-**

எஸ். பாலகிருஷ்ணன், ☎ PP. 4896264
36/14, D.S. அபார்ட்மெண்ட்ஸ்,
பிள்ளையார் கோயில் தெரு,
ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083.

# வனவாஸத்தில் ஸ்ரீ ராமபிரான் பரதனிடம் தொடுத்த வினாக்கள்

1. சிரேஷ்டமான குலத்தில் பிறந்தவரும் ஸத்தியம் தவறாதவரும் எண்ணிறந்த அசுவமேத யாகங்களையும் ராஜ ஸுயங்களையும் செய்தவரும் தர்மத்திலிருந்து விலகாதவருமான தசரத சக்கரவர்த்தி ஸுகமாக இருக்கிறாரா? தன் பிரதிக்ஞையைத் தவற முடியாததால் நேர்ந்த கஷ்டங்களைப் பார்த்து அனுதாபப்பட்டு அவருக்கு ஏதாவது வியாதி உண்டாயிற்றா? அதை எனக்குத் தெரிவிக்க வந்திருக்கிறாயா?

2. கடுமையான துக்கங்களை அனுபவித்த என் தாய் கௌஸல்யை இப்பொழுது ஸுகமாக இருக்கிறாளா? அவளைக் காட்டிலும் என் பக்திக்கும் அன்பிற்கும் பாத்திரமான உன் தாய் கைகேயி, தன் எண்ணப்படி காரியம் முடிந்து ஸுகமாக இருக்கிறாளா?

3. பிரஹ்ம ஞானியும் ஸகல வித்தைகளிலும் நிபுணரும் ஞானத்திற்கொத்த தர்மானுஷ்டானமுள்ளவரும் அதனால் அபார தேஜஸை அடைந்தவரும் இஷ்வாகு குல மன்னர்களுக்குக் குல குருவுமான வஸிஷ்ட பகவானை நமது முன்னோர்கள் பூஜித்தபடி நீயும் செய்து வருகிறாயா? அக்னி ஹோத்திரம் முதல் அசுவ மேதம் வரையிலுள்ள யாக முறைகள் யாவையும் நன்றாக அறிந்தவரும் அக்னி காரியங்களில் வெகு ஜாக்கிரதை உள்ளவரும் மஹா புத்திமானும் இஹ பரலோக தர்மங்களை ஒரே விதமாக அனுஷ்டிப்பவருமான உன் புரோஹிதர் அந்தக் காலங்களில் ஹோமம் செய்ததையும் செய்ய வேண்டியதையும் உனக்கு ஞாபகப்படுத்திக்கொண்டிருக்கிறாரா?

4. தேவதைகளை யாக யக்ஞாதிகளாலும், மாதா பிதாக்களை அவர்களுடைய சொற்படி நடந்து அவர்களுக்கு சுச்ருஷை செய்வதாலும் குருவைப் பூஜித்து அவருடைய கட்டளையை நிறைவேற்றுவதாலும், ஞாதிகளை அவர்களுக்கு வேண்டிய செல்வத்தைக் கொடுப்பதாலும், வயதாலும் ஞானத்தாலும் ஆசாரத்தாலும் பெரியோர்களை நமஸ்காரம் செய்வதாலும் வித்வான்களையும் பிராம்மணர்களையும் வெகுமதிகள் கொடுப்பதாலும் திருப்தி செய்கிறாயா?

5. தனுர் வேதத்திலும் ராஜ நீதியிலும் வல்லவரான ஸுதன்வா என்ற நமது உபாத்யாயரைப் பூஜித்து வருகிறாயா?

6. உன் மந்திரிகள் புத்திசாலிகளாகவும், நீதி சாஸ்திர நிபுணர்களாகவும் உத்தம குலத்தில் பிறந்தவர்களாகவும், பிறருடைய எண்ணங்களை



ஸூக்ஷ்மமாக தெரிந்து கொள்கிறவர்களாகவும் உன்னைப் போல் நம்பத் தகுந்தவர்களாகவும் இருக்கிறார்களா? நீதி சாஸ்த்திரத்தில் கரை கண்ட மந்திரிகளால் நன்றாக ஆலோசிக்கப்பட்டு ஜாக்கிரதையாகக் காப்பாற்றப் படும் மந்திராலோசனை அரசர்களுக்கு ஜயத்தைக் கொடுக்கும்.

7. தகுந்த காலத்தில் உறங்கச் செல்கிறாயா? குறித்த காலத்தில் விழிக்கிறாயா?

8. விடியற்காலத்தில் ஐசுவரியத்தை ஸம்பாதிக்கும் வழிகளை ஆலோசிக்கிறாயா?

9. ஒருவனாகவாவது பலருடனாவது ராஜாங்க விஷயங்களை ஆலோசிக்காமல் இருக்கிறாயா? ஒருவனாக யோசித்தால் தனக்கு அந்த விஷயத்திலுள்ள விருப்பாலோ, வெறுப்பாலோ பலருடன் குண தோஷங்களை அறிய முடியாது. பலருடன் யோசித்தால் ஒருமை ஏற்படாது. அந்த யோசனை சீக்கிரம் வெளியாகிவிடும்.

10. நீ செய்யும் ஆலோசனை அந்த காரியம் நடந்து முடிவதற்கு முன் ராஜாங்கத்தில் தெரியாமலிருக்கிறதா?

11. ஸுலபமான ஸாதனங்களால் விசேஷப் பயன் கிடைக்கக்கூடிய காரியத்தை நன்றாக ஆலோசித்துத் தாமதமில்லாமல் செய்து முடிக்கிறாயா? சீக்கிரத்தில் செய்து முடிக்காத காரியத்தின் பயனைக் காலம் எடுத்துக் கொள்கிறது.

12. நீ செய்யும் ஆலோசனைகள் அந்த காரியம் முடிந்து கொண்டிருக்கும் பொழுதாவது ஆரம்பத்திற்கு முன்பாவது உன் கீழுள்ள சிற்றரசர்களுக்குத் தெரியாமல், முடிந்த பிறகு மட்டும் தெரிகின்றனவா?

13. நீயும் அமைச்சர்களும் ஆலோசனை செய்யாத விஷயங்களைப் பிறர் அனுமானத்தால் அறிய முடியாமல் ஜாக்கிரதையாகக் காப்பாற்றி வருகிறாயா?

14. அனேக ஆயிரம் முரடர்கள் இருந்தாலும் அவர்களை விட்டு நன்றாகப் பரிசோதித்து காரியத்தை செய்யும் புத்திமானை சேர்த்திருக்கிறயா? ராஜ்ய விஷயங்களில் ஸங்கடம் நேரும்பொழுது அந்த புத்திமான் ராஜாக்களுக்கு மிகுந்த கீர்த்தியையும் மேன்மையையும் உண்டாக்கும் உபாயங்களை உபதேசிப்பார். முட்டாள்களை ஆயிரக்கணக்காயும் கோடி கோடியாயும் அரசன் சேர்த்துக் கொண்டாலும் காரியங்களை ஆலோசிக்கும் பொழுது அவர்கள் கொஞ்சமாவது உதவுவார்களா? பிறர் ஆரம்பித்த காரியத்தை உடனே அறியும் சக்தியுடையவனும் ஸ்திரமான புத்தியுடையவனும் நிபுணனுமான ஒரு

மந்திரியிருந்தாலும் அவன் அந்த அரசனுக்கும் சிற்றரசர்களுக்கும் மிகுந்த புகழை ஸம்பாதிப்பான்.

15. முக்கியமான வேலையாட்கள் சமையல், பரிமாறுதல் முதலிய காரியங்களில் மாத்திரமும், ஜாதி முதலியவைகளால் நடுத் திறத்தார்கள் படுக்கை, ஆஸனம், வாஹனம் முதலியவைகளைக் கீழத்தரமான ஸேவகர்கள் கால் கழுவுவது, மரவடிகளைக் கொண்டு வருவது, கால் பிடிப்பது முதலிய வேலைகளில் மாத்திரமும் உபயோகிக்கப் படுகிறார்களா? இல்லாவிட்டால் அதிகப் பொறாமையும் மனக்கஷ்டமும் உண்டாகும்.

16. உத்தமமான வஸ்திரங்கள், ஆபரணங்கள், வாகனங்கள் முதலியவைகளை அமைச்சர்களிடத்தில் வேறு மனிதர்களால் ரஹஸ்யமாக அனுப்பி, அரசனுடைய அந்தப்புரத்திலிருந்து உங்களுக்கு அனுப்பப்பட்டதென்றும் இதர ராஜாக்களிடமிருந்து அனுப்பப்பட்ட தென்றும் சொல்லி அவர்கள் ஆசையுடன் அவைகளை வாங்கிக் கொள்கிறார்களா என்று பரிட்சித்துப் பார்ப்பது அரசர்களுக்கு வழக்கம். அதில் தேறினவர்களும் பல தலை முறைகளாக வேலை பார்க்கிறவர்களும் மனோ வாக்கு விஷயங்களில் சுத்தர்களுமான உத்தம மந்திரிகளைப் பெரிய விஷயங்களுக்கே உபயோகித்து வருகிறாயா?

17. கைகேயி மைந்தா! வெகு கடுமையாய் ஜனங்களைத் தண்டித்து அதனால் அவர்கள் கஷ்டப்பட்டு மந்திரிகளிடத்தில் முறையிட்டு அவர்கள் உன்னைத் தடுக்கும்படி வைத்துக் கொள்ளாமல் இருக்கிறாயா? கெட்ட தானங்கள் வாங்கி அளவற்ற செல்வத்தை சேர்த்து அதனால் யாகம் செய்ய விரும்புகிறவனை ரித்விக்குகள் எப்படி அவமதிப்பார்களோ; தங்களை பலாத்காரம் செய்து ஸ்வாதீனப்படுத்திக் கொள்ள விரும்பும் ஸ்த்ரீகள் புருஷனை எப்படி அவமதிப்பார்களோ; அப்படி தண்டிக்கத்தகாதவர்களைக் கடுமையாகத் தண்டித்து அவர்களிடத்திலிருந்து செல்வத்தைப் பறித்து ஹிம்சை செய்வதால் ஜனங்கள் உன்னை அவமதிக்காமல் இருக்கிறார்களா?

18. ஸாம தான பேத தண்டமென்ற உபாயங்களைப் பிரயோகிப்பதில் கெட்டிக்காரனும் மஹரிஷிகளால் உபதேசிக்கப்பட்ட பிறரை வஞ்சிக்கும் நீதிகளை நன்றாகக் கற்றவனும், அரசனுக்கு அந்தரங்கமான வேலை யாட்களின்மேல் தோஷங்களை ஏற்படுத்தி அவர்களை கலைக்கிறவனும், அரசனை ஹிம்சை செய்வதில் பயமற்றவனும், காலக்கிரமத்தில் அரசனுடைய செல்வத்தைக் கைப்பற்றிக் கொள்ளுகிறவனுமான புருஷனை எந்த ராஜா கொல்லாமல் விடுவானோ, அவனால் ராஜ்யத்தை

விட்டு அந்த ராஜா துரத்தப்படுவான் அல்லது கொல்லப்படுவான். இவ்விதமானவர்களை உன்னிடம் வைத்துக் கொள்ளாமல் இருக்கிறாயா?

19. அரசன் செய்யும் மரியாதையால் ஆனந்தப்படுபவனும் பிறரை ஜயிக்கும் சக்தியுடையவனும், அந்தந்த ஸமயத்திற்குத் தகுந்தபடி தன் படைகளை அணிவகுப்பதிலும் சத்ருவின் அணிவகுப்பைப் பிரிப்பதிலும், படைகளை நடத்துவதிலும் நுட்பமான புத்தியுள்ளவனும், ஆபத் காலத்தில் கலங்காத தைரியமுடையவனும் யஜமானிடத்தில் விசுவாஸமுள்ளவனும் உள்ளும் புறமும் சுத்தமாக இருப்பவனும், உத்தம குலத்தில் பிறந்தவனும் காரியங்களை நடத்துவதில் திறமையுள்ள வனுமான மனிதனை படைத் தளபதியாக நியமித்துள்ளாயா?

20. மஹா பலசாலிகளும் உத்தம குணங்கள் பொருந்தினவர்களும் யுத்தத்தில் ஸ்மர்த்தர்களும் சூரர்களுமான யுத்த வீரர்களை அவர்களுடைய பூர்வ வரலாற்றையும் தைரியத்தையும் நன்றாகப் பரீக்ஷித்து விசேஷமான வெகுமதிகளைச் செய்து மேன்மைப்படுத்தி யிருக்கிறாயா?

21. படைகளுக்கு அந்தந்தக் காலத்தில் கொடுக்க வேண்டிய சம்பளத்தையும் அவர்கள் செய்யும் வேலைக்குத் தகுந்தபடி உடனடியாகக் கொடுத்து வருகிறாயா? இல்லாவிட்டால் சம்பளம் பெறுபவர்கள் யஜமானிடத்தில் கோபித்து விசுவாஸமற்றுப் போவார்கள். அது பெரிய அனர்த்தத்தை விளைவிக்கும்.

22. க்ஷத்திரிய குலத்தில் பிறந்த முக்கியமானவர்களெல்லோரும் உன்னிடத்தில் மிகுந்த பிரீதி வைத்து எந்த ஸமயத்திலும் உனக்காக உயிரை விடத் தயாராக இருக்கிறார்களா?

23. உன் தூதர்கள் உன் தேசத்தில் பிறந்தவர்களாகவும், பிறருடைய எண்ணங்களை அறியக்கூடியவர்களாகவும், காரியங்களை நடத்துவதில் ஸமர்த்தகர்களாகவும், தயங்காமல் பதில் சொல்லுகிறவர்களாகவும், நீ சொல்லி அனுப்பிய ஸமாசாரத்தையும் பதிலையும் பிசகாமல் சொல்லுகிறவர்களாகவும், காரியத்தை முடிப்பதில் பல முக்கியமான விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தாலும் யஜமானனுடைய கட்டளையை மறக்காமலே வியவஹாரத்தை நடத்துகிறவர்களாகவும், விஷயங்களைப் பகுத்தறியும் சக்தியுள்ளவர்களாக இருக்கிறார்களா?

24. மந்திரி, புரோஹிதன், யுவ ராஜா, ஸேனாதிபதி, வாசல் காப்பவர்களுக்குத் தலைவன், அந்தப்புரத்தின் காரியங்களுக்குத் தலைவன், சிறைச்சாலைத் தலைவன், தனத்தை வசூல் செய்கிறவர்களுக்குத் தலைவன், அரசனது உத்தரவை பலர் அறியும்படி

வெளியிடுகின்றவர்கள், நியாயாதிபதிகள், சைன்யங்களுக்குச் சம்பளத்தையும் உணவையும் கொடுப்பவன், ராத்திரியில் நகர சோதனை செய்து கோட்டை வாசல்கள், பிரகாரம் முதலியவற்றை ரக்ஷிப்பவர்களுக்குத் தலைவன், அரசனிடத்திலிருந்து ஒரே தடவையாக திரவியத்தை வாங்கிக்கொண்டு கூலிக்காக வேலை செய்யும் மற்றவர்களுக்குப் பிரித்துக் கொடுப்பவன், ஒவ்வொரு நாளும் ராஜ சபையை அலங்கரிப்பது, அரசன், மந்திரி முதலியவர்களுக்குத் தகுந்த ஆஸனங்களை அவர்களுக்காக ஏற்பட்ட இடங்களில் போடுவது, ஸபைக்கு வர வேண்டியவர்களை அழைத்து வந்து அவர்களுடைய தகுதிக்கு தகுந்தபடி ஏற்பட்ட ஆஸனங்களில் உட்காரச் செய்வது, ஸபையில் வரத் தகாதவர்களை விலக்குவது, ஸபையில் ஸப்தமில்லாமல் பார்த்துக்கொள்வது, ஸபையைப் பாதுகாப்பது முதலிய வேலைகளை செய்பவனுக்குத் தலைவன், பிறருடைய திரவியங்களைத் திருடுவது முதலிய குற்றங்களை செய்தவர்களை ராஜாவினுடைய உத்தரவுப்படி தண்டிக்கிறவர்களுக்குத் தலைவன், கோட்டைகளை ரக்ஷிப்பவர்களுக்குத் தலைவன், ராஜ்யத்தின் எல்லைகளில் நான்கு திக்குகளிலும் அன்னிய ராஜாக்கள் வராமல் பாதுகாப்பவர்களுக்குத் தலைவன், இந்த பதினெட்டு பேர்களால் தன் ராஜ்யத்தில் மந்திரியையும், புரோஹிதரையும், இளவரசனையும் அரசன் பரிக்ஷிக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் எப்பொழுதும் தன் அருகிலிப்பதால் அவர்களுடைய ஸ்வபாவத்தைத் தானே நேரில் தெரிந்து கொள்ளலாம். தன் அரசாங்கத்தில் மற்ற பதினைந்து பேர்களையும் சத்ரு பக்ஷத்தில் முன் சொன்ன பதினெட்டு நபர்களையும் மாறு வேடம் பூண்ட சேவகர்களை ஒவ்வொருவருக்கும் மூன்று பேர் வீதம் ஏற்படுத்தி ஒருவருக்கொருவர் தெரியாமல், மேற்சொன்னவர்கள் தங்களுக்கிட்ட வேலையை ஒழுங்காக செய்கிறார்களா என்று பரிசோதிக்கிறாயா?

25. உன் அரசாங்கத்திலிருந்து விரட்டப்பட்டு திரும்பி வந்திருக்கும் விரோதிகளை பலமற்றவர்களென்று அலக்ஷியம் செய்யாமலிருக்கிறாயா? ஏதாவது ஆதாரமில்லாமல் அவர்கள் திரும்பி வரமாட்டார்களல்லவா? அவர்களை ஜாக்கிரதையுடன் கவனித்துக் கொண்டிருக்க வேண்டும்.

26. பௌத்தன், சார்வாகன் முதலிய நாஸ்தீக அந்தணர்களுடன் பழகாமலிருக்கிறாயா? சாஸ்திரங்களுக்கு எதிரான அர்த்தங்களைச் சொல்வதில் இவர்களுக்கு அதிகத் திறனுண்டு. உண்மையான ஞானத்திற்கு எதிர் மறையான ஞானத்தை உடையவர்கள்; குழந்தைகளைப் போல் ஒன்றும் தெரியாதவர்கள்; ஆனால் தங்களை பெரிய புலவர்களென்று எண்ணுகின்றவர்கள். வேத மார்க்கத்திற்கு எதிர்

மறையான புத்தியை உடையவர்கள். தாமஸ ஸ்மிருதிகளையும் தாமஸ புராணங்களையும் நீக்கி, மஹரிஷிகளால் செய்யப்பட்டு சாதுக்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட நூல்களையும் தர்ம சாஸ்திரங்களையும் பெரியோர்களுடைய ஸம்பிரதாய பரம்பரைப்படி அர்த்தம் செய்யாமல், கேவல தர்க்கத்தைப் பிரயோகித்து அவை இஹத்திலும் பரத்திலும் பயனற்றவை என்று வாதிப்பவர்கள்.

27. நமது ராஜ்யமான அயோத்யை மஹா வீரர்கள் வசிக்கும் இடம்; நமது முன்னோர்களால் ஆதி காலம் முதல் ஆளப்பட்டு வருகிறது. அதிலுள்ள நான்கு வர்ணத்தாரும் வர்ணாசிரம தர்மங்களை முறைப்படி நடத்தி வருகின்றார்கள். புலன்களை அடக்கியவர்கள்; அதிக ஆர்வமுள்ள வர்கள். உத்தம குணங்களால் அலங்கரிக்கப்பட்டவர்கள்; மேலும் அந்த நகரம் எல்லா வித்யைகளிலும் கை தேர்ந்தவர்கள் சந்தோஷத்துடன் வாழும் ஸ்தலம். அதிலுள்ள பிரஜைகள் எந்தவொரு குறையுமில்லாமல் ஆனந்தமாக இருக்கிறார்கள். ஸகல ஸௌக்கியங்களும் பொருந்தி, விரோதிகள் புக முடியாத அரண்களுடன், புதுமையான ஆலயங்களாலும் அரண்மனைகளாலும் உப்பரிகைகளாலும் அலங்கரிக்கப்பட்டு, உத்தமமான யானைகள், குதிரைகள், ஒட்டகங்கள் இவைகளால் நிறைந்தது. பிறரால் வெல்ல முடியாததென்ற பெயருக்குத் தகுந்த யோக்யதை பெற்றிருக்கிறது. இவ்விதமான ராஜ்யத்தை ஜாக்கிரதையாக பாதுகாத்து வருகிறாயா?

28. நமது ராஜதானியிலுள்ள நாடுகளில் அசுவ மேதம், சயனம் முதலிய யக்ஞங்கள் நடத்தப்படும் சாலைகள் பல உண்டு. அங்கே வசிக்கும் பிரஜைகள் தங்களுக்குத் தகுந்த அரசன் கிடைத்திருப்பதால், காலத்தில் மழை பெய்து நீர் வளம், நில வளம் முதலியவை பொருந்திய தேசத்திலேயே வஸிக்க விரும்புகிறார்கள். இதர தேசங்களுக்குப் போக மனம் வராது. நமது தேசத்தில் நேர்த்தியான தேவாலயங்களும், அழகான சாலைகளும் அவைகளின் பக்கத்தில் அமைக்கப்பட்டிருக்கும் ஓடைகளும் தண்ணீர் பந்தல்களும், பயிரிடுவதற்காக வெட்டப்பட்ட பெரிய ஏரிகளும் விளங்குகின்றன. உழுது பயிரிடப்படாத பாகம் நமது தேசத்தில் அதிகமாகக் கிடையாது. ஆடு மாடுகளுக்கோ கணக்கில்லை. அதி மழை பெய்வது, மழை பெய்யாமலிருப்பது, எலிகள், வெட்டுப் பூச்சிகள், பக்ஷிகள், அரசர்கள் சமீபத்தில் வஸிப்பதென்ற ஆறு உபத்திரவங்களில்லை. மானம் பார்த்த நிலமுடையதல்ல. எங்கும் ஆற்றுப் பாய்ச்சலுள்ளது. சோலைகளும் தோப்புகளும் எங்கும் நிறைந்து பார்க்க அழகாக இருக்கும். புலி முதலிய துஷ்ட மிருகங்கள் ஸஞ்சாரமில்லை. திருட்டு பயமில்லை. ரத்தினம், பொன், வெள்ளி

முதலியவை கிடைக்கும் சுரங்கங்கள் பல உண்டு. பாபிகள் நமது ராஜ்யத்தில் வஸிக்க மாட்டார்கள். அங்குள்ள ஸ்திரீ புருஷர்கள் எப்பொழுதும் ஆனந்தத்துடன் காலம் கழிக்கிறார்கள். ஆறு, குளம் முதலியவைகளின் கரையிலுள்ள வனங்களில் சகல பண்டங்களையும் விற்க ஏற்பாடு செய்யப்பட்டு, எல்லோருக்கும் தெரியும்படி குறிப்பிட்ட நாட்களில் வர்த்தகர்கள் கூடும் சந்தைகள் பல உண்டு. இவ்விதமாக நமது ராஜ்யத்திலுள்ள தேசங்கள் ஸுகத்தை அடைந்திருக்கின்றனவா?

29. பயிரிடுபவர்களும் பசுக்களை மேய்ப்பவர்களும் உன் பரிபாலனத்தில் எல்லையற்ற தனத்தை அடைந்து, உன்னிடத்தில் அன்பு வைத்திருக்கிறார்களா? கொடுக்கல், வாங்கல், ஏற்றுமதி, இறக்குமதி முதலிய வியாபாரங்களை செய்து தணிகர்கள் உன்னை அண்டி ஸுகமாகப் பிழைக்கிறார்களா? ராஜா தன் ராஜ்யத்தில் உள்ள ஜனங்கள் யாவரையும் தர்மமாக ஆள வேண்டும். ஆகையால் மேற்சொன்னவர் களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து காப்பாற்றி வருகிறாயா?

30. உன்னைச் சேர்ந்த ஸ்திரீகளிடத்தில் அனுகூலமாக நடந்து கொள்கிறாயா?

(தொடரும்)


மதுரமுரளி மாத இதழிற்கு சந்தாதாரர்கள் வரவேற்கப்படுகிறார்கள். வருஷச் சந்தா ரூ.60/-தனிப் பிரதி ரூ.5/-

டிமாண்டு டிராப்டை 'குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்' என்ற பெயரில் வாங்கி, உறை மீது

மதுரமுரளி, **V. சங்கரன்,**
5/3, MIG Flats, பி.டி. ராஜன் ரோடு,
கே.கே. நகர், சென்னை - 600 078
தொலை பேசி எண் : 4840527

என்ற விலாசத்திற்கு அனுப்பவும். மணியார்டர் மூலமும் அனுப்பலாம்.

மிஷன் சார்பில் ''சாந்தீபனி குரு குலம்'' என்ற டிரஸ்டின் கீழ் சாம வேத பாடசாலையும், யஜுர் வேத பாடசாலையும் சென்னை வளசரவாக்கத்தில் நடைபெறுகின்றன. பாடசாலைக்கு நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பும் நன்கொடை களுக்கு வருமான வரி விலக்கு உண்டு. பாட சாலைக்கு வித்யார்த்திகளையும், 'மதுரமுரளி' இதழுக்கு சந்தாதாரர்களைச் சேர்த்தும், விளம்பரங்களை அனுப்பி வைத்தும் உதவக் கேட்டுக் கொள்கிறோம்.

# ஸ்ரீ குருஜியின் உபன்யாஸத்திலிருந்து

இந்த உலகில் பல கோடி பிறவிகளில் செய்த புண்ணியத்தின் பலனாகத்தான் மனிதப்பிறவி கிடைக்கின்றது. இந்த மனிதப் பிறவியும் இறைவனை அடைவதற்காகத்தான். உலகத்தில் பெரிய பணக்காரனாக இருப்பவனும், ஸகல வசதிகளுடன் இருப்பவனும் கூட திடீர் என்று இவைகள் இருந்தும் நமக்கு நிம்மதியில்லை, இவைகளினால் ஒன்றும் பிரயோஜனமில்லை என்பதைப் புரிந்து கொண்டு இறைவனைத் தேட ஆரம்பிக்கின்றான். அப்படி அவனுக்குத் தோன்றுவதற்குக் காரணம் பல ஜன்மங்களில் அவன் செய்திருந்த புண்ணியமே. உலகத்தில் பல விதத்தில் கஷ்டப்படுகிறவர்களும் கூட அந்த கஷ்டத்தின் கொடுமை தாங்காமல் தங்களைத் தாங்களே நொந்து கொண்டு தவறான மார்க்கங்களுக்கும் செல்கின்றனரே அன்றி அநேகமாக ஆன்மீக வாழ்க்கைக்கு யாரும் திரும்புவதைக் காணோம்.

ஒருவனுக்கு இறை நாட்டம் ஏற்படுவதற்கு பூர்வ புண்யம்தான் காரணம் ஆகுமே தவிர வேறு ஒன்றும் இருக்க முடியாது. இறை நாட்டம் ஏற்பட்ட பிறகு ஸாதனை காலங்களில் எவ்வளவுக்கெவ்வளவு துக்கங்கள் ஏற்படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு இறைவனிடம் நெருக்கம் ஏற்படும். நாம், நமக்கு ஏற்படும் துக்கங்களும் சோதனைகளும் ஏதோ ஒரு நன்மையின் பொருட்டே ஏற்படுகின்றன என்பதில் திடமான நம்பிக்கை கொள்ள வேண்டும். எப்பொழுதும் இறைவனையே சார்ந்திருக்கப் பழக வேண்டும். எத்தனை தடைகள் வந்தாலும் சோர்ந்து போகாமல் தைரியத்துடனும் பொறுமையுடனும் எதிர் கொள்ள வேண்டும். இறைவன் இருக்கின்றானோ இல்லையோ என்ற சந்தேகத்துடனே சிலர் பக்தி சாதனைகளைக் கைக்கொள்ள முயற்சிப்பார்கள். அது அஸ்திவாரம் இல்லாமல் வீடு கட்ட முயல்வது போல் ஆகும். ஆகவே அதில் பிரயோஜனமில்லை. நம்பிக்கைதான் அடிப்படை. குருவையோ, தெய்வத்தையோ சர்வ சக்தி வாய்ந்தவராகவும் பலம் பொருந்தியவராகவும் பிரம்ம ஸ்வரூபமாகவும் நாம் நம்பி பக்தி செய்தோமானால்தான் நாமும் பலமுள்ளவராக ஆவோம். குருவிடமோ தெய்வத்திடமோ நமக்கு நம்பிக்கையும் விஸ்வாஸமும் குறையுமானால் நாமும் பலவீனமாக ஆகி விடுவோம். எப்பேர்ப்பட்ட தடைகளையும் விடாத பிரார்த்தனையால் தகர்த்து எறிந்து விடலாம். நாம் குருவையே தெய்வமாகக் கருதி பக்தி செய்ய வேண்டும்.

மஹாத்மாக்களை நம் போல் மனிதராக ஒரு காலும் கருதக் கூடாது. நம் போலவே அவர்கள் பேசி பழகி நடந்து கொண்டாலும் அவர்கள் ஸஞ்சரிக்கும் லோகமே தனி. அதை ஒரு காலும் புரிந்து கொள்ள முடியாது. புரியாமல் பேசுபவர்களை உதாஸீனப்படுத்திவிட வேண்டும். நேரத்தை சிறிது கூட வீணாக்காமல் ஆன்மீக புஸ்தங்களைப் படித்தோ, ராம ஜபம் செய்தோ, தியானம் செய்தோ செலவழிக்க வேண்டும். எந்த வேலைகளில் ஈடுபட்டிருந்தாலும் வாக்கினால் நாமா சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். ஆர்ப்பாட்டமான ஸாதனைகளைக் காட்டிலும் ஆழமான ஸாதனை வேண்டும். அநேக நல்ல காரியங்களை செய்பவரும், நல்ல குணங்கள் நிறைந்தவராக காணப்படுபவர்களும், வருடக் கணக்கில் தியானம். ஜபம் என்று ஈடுபட்டிருப்பவர்களும் கூட, ஒன்றையும் அடையக் காணோமே என்று நம்மில் பலருக்கு சந்தேகம் வருவது உண்டு.

சில குழந்தைகள் பரிட்சைக் காலங்களில் படிப்பதற்கு மிகவும் அமர்க்களப்படுத்துவார்கள். Libraryக்குச் சென்று படிப்பார்கள். நண்பர்களுடன் சேர்ந்து Combine study செய்வார்கள். இரவெல்லாம் கண் விழித்து தூக்கம் வராமல் இருப்பதற்காக ஏதேதோ ஏற்பாடு செய்து படிப்பார்கள். பார்ப்பதற்கும் அதிகம் சிரமப்பட்டுப் படிப்பவர்கள் போன்றும், மிகவும் அசக்தியாகக் காணப்படுவார்கள். முடிவுகள் வரும்பொழுது பார்த்தால் மதிப்பெண்கள் ஒன்றும் பெரியதாக இராது; காரணம் என்ன? ஆர்ப்பாட்டம் இருந்த அளவுக்கு படிப்பில் ஆழ்ந்த கவனம் இல்லாததே காரணம். சிலர் சில மணி நேரங்கள் ஒதுக்கி அலட்டிக் கொள்ளாமல் முழுக் கவனமும் செலுத்தி மனதில் நன்றாக வாங்கிக் கொண்டு படித்து அதிக மதிப்பெண் வாங்கி விடுவார்கள்.

அது போல் தியானம் என்றும், ஜபம் என்றும், வேதாந்தம் என்றும், பிரம்மம், அத்வைதம், பகவான் என்று பேசியும் காரியத்தில் ஒன்றும் இல்லாதவர்களாக போய் விடுவதே காரணம். வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு இவர்களே பெரியவர்களாகத் தெரிவார்கள்.

சிலர் ரகஸ்யமாக ஆழ்ந்து ஸாதனைகளை தனிமையில் தனக்கும் பகவானுக்கும் தெரிந்தால் போதும் என்ற மனோ பாவத்தில் செய்து பலனை அடைந்து விடுகின்றார்கள்.

உலக மக்கள் வெளி நடவடிக்கைகளைப் பார்க்கின்றார்கள். பலனோ உள்ளத்தின் நிலையைக் கொண்டு அடையப்படுவதாக உள்ளதே காரணம்.

# கணி கண்ணன் கதை - 3

மூன்று பேரும் அப்படியே புறப்பட்டு நாலு, அஞ்சு மைல் போவதற்குள் நன்றாக இருட்டி விட்டது. மனுஷ்யர்கள் மாதிரியே விளையாடனும் என்று பகவானுக்கு இருந்ததால், ராத்திரி ஆகிவிட்டது. அதனால், இனிமேலே பிரயாணம் பண்ணவேண்டாம். இங்கேயே ராத் தங்கிவிட்டு கார்த்தாலே கிளம்பலாம் என்று சொன்னான். பகவான் தான் சொன்னானோ, ஆழ்வார் தான் சொன்னாரோ, அவனே, இவர் சொன்ன வண்ணம் செய்பவனாகத்தானே இருந்தான்!

ஆகக்கூடி, பாலாற்றங்கரையிலே குளு குளு என்று காற்று வீசுகிற இடத்திலே மூன்று பேரும் ராப்பொழுதை சொஸ்தமாகக் கழித்தார்கள்.

இதற்குள் கோவிலை விட்டுப் பெருமாள் புறப்பட்ட அந்த நிமிஷத்திலிருந்தே காஞ்சீபுரத்தில் என்ன ஆயிற்று என்றால், ஒரேயடியாக அலக்ஷ்மி (அமங்கலம்) வந்து கப்பிக்கொண்டு விட்டது.பகவான் ஊரை விட்டுப் போய் விட்டானென்றால் அவனுடைய வக்ஷ ஸ்தலத்திலேயே வாஸம் பண்ணிக்கொண்டிருக்கும் லக்ஷ்மியும் தானே கூடப் போய் விடுவாள்? அதனால் நகரேஷு காஞ்சி என்று பிரசித்திப் பெற்ற ராஜதானியிலே லக்ஷ்மீகரமே போய் மூதேவி வந்து மூடிக்கொண்டு விட்டது. ஒரே இருட்டு! ஒரு இடத்திலேயாவது தீபமே ஏற்றவில்லை. தேவாலயங்களிலும் தீபமில்லாமல் பூஜையெல்லாம் நின்று போயிற்று. எல்லார் மனதிலேயும் ஒரேயடியாக இருள் கப்பிக் கொண்டு விட்டது. இனம் தெரியாமல் ஒரே துக்கம், ஒரே திகில்.

எல்லோரும் போய் ராஜாவிடம் முறையிட்டார்கள்.

அவனுக்கும் ஒரே வியாகூலம், பயப் ப்ராந்தியாகத்தான் இருந்தது. பெருமாள் ஊரை விட்டுப் போனதில் தான் இப்படி உத்பாதமாக ஆகிவிட்டது என்று புரிந்தது. இதோ போய் அவர் காலில் விழுந்து பிரார்த்தித்துக் கொண்டு அவரை மறுபடி அழைத்துக் கொண்டு வருகிறேன் என்று புறப்பட்டான்.

இருட்டிலே காபந்து பண்ணி ஊரெல்லைக்கு வருவதற்குள் பொழுது விடிந்து விட்டது.

பாலாற்றங்கரையில் பகவான் ஆழ்வாரோடும் கணி கண்ணனோடும் தங்கி இருந்த இடத்துக்கு ராஜா மறு நாள் காலை வந்து சேர்ந்தான்.



ஓரிரவிருக்கை (ஓரிக்கை)

அப்போதும் அவனுக்கு கணி கண்ணனிடம் தான் தப்பாக நடந்து கொண்டு நகர ப்ரஷ்டம் பண்ணினதற்காக மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று தோன்றவில்லை. நேரே பெருமாளிடம், - அவர் அர்ச்சையாக இருந்தாரோ, சல (நடமாடும்) மூர்த்தியாக இருந்தாரோ- ஏதோ ஒன்று அவரிடமே போய் நெடுஞ்சாண் கிடையாக நமஸ்காரம் பண்ணினான். பெருமாள் இல்லாமல் ஆலயம் சூன்யமானது போலவே ஊர் முழுக்கவும் சூன்யமான மாதிரி ஆகி விட்டது. என்ன அபசாரம் நடந்திருந்தாலும் க்ஷமித்து பகவான் மறுபடியும் காஞ்சிக்கு எழுந்தருளணும் என்று வேண்டிக் கொண்டான்.

ஸ்வாமியோ நானாக ஸங்கல்பித்துக்கொண்டு அங்கே விட்டுப் புறப்படவில்லை. ஆழ்வார் சொன்னார். அவர் சொன்னபடி செய்யணு மென்றே கூட வந்து விட்டேன்.

அவரே மறுபடியும் சொன்னாரல்லாமல் நான் இங்கிருந்து திரும்புவதற்கில்லை என்று சொல்லி விட்டார்.

அர்ச்சனா மூர்த்தியாகவே அவன் இருந்திருந்தால், இப்படி அசரீரியாகத் தெரிவித்தார் என்று வைத்துக்கொள்ளலாம்.

வேறே வழியில்லாமல் ராஜா ஆழ்வார் காலில் விழுந்து வேண்டிக் கொண்டான்.

அவரானால், பெருமாளை விட்டு என்னாலே இருக்க முடியாது. அதனாலே அவரை மாத்திரம் உன்னோடு போகச் சொல்லிவிட்டு நான் இங்கேயே இருப்பது என்பது நடக்காத காரியம் என்று மறுத்துச் சொல்லி விட்டார்.

தாங்களும் தான் திரும்ப வாருங்கள். நான் அதற்குத்தான் காத்துக்கொண்டு இருக்கிறேன் என்று ராஜா வேண்டிக் கொண்டான்.

அதற்கு அவரும், பெருமாள் சொன்ன மாதிரியே பதில் சொன்னார். நானாக உத்தேசம் பண்ணி இங்கே வந்திருந்தால், நானாகவே மறுபடி திரும்பி விடலாம். ஆனால் நானும் தானாகப் புறப்பட்டு விடவில்லை. கணி கண்ணனுக்கு நீ ஆக்ஞை பண்ணினதாலும், நீ நடந்து கொண்ட விதத்தில் அவனுக்கே உன் ஊரில் இருக்கப் பிடிக்காததாலும், அவன் புறப்பட்டான். அவனை விட்டுப் பிரிந்திருக்க முடியாமலே நானும் பின்னோடே கிளம்பினேன்.

ஆகையால், என் காலில் விழுவதற்குப் பதில் அவன் காலில் போய் விழு. பண்ணினது தப்பு என்று க்ஷமாபனம் பண்ணிக்கொண்டு திரும்பி வரவேணுமென்று அவனிடம் பிரார்த்தித்துக்கொள். அவன் ஸம்மதித்தால் நானும் திரும்புகிறேன். பெருமாளையும் திரும்பச் சொல்கிறேன் என்று முடிவாகச் சொல்லி விட்டார்.

அப்புறம் என்ன செய்வது?

ராஜா போய்க் கணி கண்ணன் காலில் விழுந்தான்.

சிஷ்யனுக்காக குரு முதலில் த்ரிபுவன சக்ரவர்த்தியான பகவானை வாரிச் சுருட்டிக்கொண்டு கோவிலை விட்டு வரப்பண்ணினார். இப்போது அந்தப் பையன் காலில் பல்லவ சக்கரவர்த்தி விழுந்து மன்னிப்பு கேட்டுக் கொள்ளும்படிச் செய்கிறார்.

ராஜா வேண்டிக்கொண்டவுடனே, ஸ்வபாவத்தில் இளகின மனம் படைத்த கணி கண்ணன் காஞ்சீபுரத்துக்குத் திரும்பவும் புறப்பட்டான்.

அவன் பின்னோடே ஆழ்வார், ஆழ்வார் பின்னோடே அவர் *சொன்னபடி எல்லாம் செய்கிற பெருமாள்* என்று எல்லோருமாக ராஜதானிக்கு வந்து சேர்ந்தார்கள்.

பெருமாள், ஆழ்வார் , கணி கண்ணன் ஆகிய மூன்று பேரும் ஒரு ராத்திரி முழுவதும் பாலாற்றங்கரையில் தங்கிய அந்த இடத்திற்கு **ஓரிரவிருக்கை** (ஓர் இரவு இருக்கை) என்ற பெயர் ஏற்பட்டது. அந்தப் பெயர் சிதைந்து சிதைந்து தான் இப்போது **'ஓரிக்கை'** என்று வழங்குகிறது.

மூன்று பேரும் காஞ்சிபுரத்திற்குத் திரும்பியதும் அலக்ஷ்மி யெல்லாம் நீங்கி நகரம் பழையபடி சோபை பெற்றது. ஜனங்களின் மனதிலிருந்த பீதி, துக்கம் எல்லாமும் போய் ஸந்துஷ்டி நிறைந்தது.

பகவான் கோவிலுக்குத் திரும்பின அப்புறமும் சுருட்டிப் பிடித்துக்கொண்டு வந்த சேஷ பர்யங்கத்தை விரித்துப் படுத்துக் கொள்ளாமலே நின்று கொண்டிருந்தான். பாயைச் சுருட்டிக் கொண்டு புறப்படு என்று உத்தரவு போட்டவர் படு என்று மாற்றி உத்தரவு போடும் வரையில் தானாக எப்படி படுப்பது என்று தான் நின்று கொண்டே இருந்தான். பக்தர்கள் வார்த்தைக்கு பகவான் அப்படிக் கட்டுப்படுகிறான். 'பக்த பராதீனன்' என்று அவனைச் சொல்வது அதனால் தான்.

இப்படி பரமபத நாதனாக இருக்கப்பட்டவன், தன் வார்த்தைக்குக் காத்துக்கொண்டிருக்கிறான் என்று பார்த்தவுடன், ஆழ்வாருக்கு நெஞ்சு உருகி விட்டது. முன்னே பாடின பாட்டின் வார்த்தைகளையே துளித் துளி மாற்றி, ஆனால் அர்த்தம் அடியோடு மாறும்படியாக பாடினார்.

இப்போதும் உன்னை விட்டுப் பிரிந்திருக்க முடியாத நான்தான் திரும்பி வந்து விட்டேனே! இன்னமும் ஏன் யோசிக்கிறாய்? உன் சேஷ பர்யங்கத்தை விரித்துக்கொண்டு படுத்துக்கொள் என்று சொல்லாமல் கணி கண்ணன் தான் திரும்பி வந்து விட்டானே! என்று சிஷ்யனைப் பெருமைப்படுத்தி அவனிருக்கிற இடம் எதுவானாலும் அங்கே அவனை ரக்ஷிப்பதற்காக பகவானும் கூட இருக்கணும் என்று த்வனிக்கும்படியாக ஆரம்பித்தார்.

*''கணி கண்ணன் போக்கொழிந்தான்.''*

'போக்கு' ஒழிந்தான் - இந்த ஊரை விட்டு பிரயாணம் பண்ணுவதில்லை என்று இங்கேயே தங்கி விட்டான்.

முன்னே ''கணி கண்ணன் போகின்றான்'' என்று ஆரம்பித்துப் பாடியவர் இப்போது அதையே கொஞ்சம் மாற்றி - அர்த்தத்திலே ரொம்ப வேறுபட்டாலும் - வார்த்தையிலே ஸ்வல்பமாகவே மாற்றிப் பாடிக்கொண்டு போய் *''நீயுமுன்றன் பைந்நாகப் பாய் விரித்துக்கொள்''* என்று முடித்தார்.. முன்னே சுருட்டிக் கொள் என்று சொன்னதை மாற்றி ''விரித்துக்கொள்'' என்று முடித்து விட்டார். அதே வெண்பா மீட்டர். பெரும்பாலான வார்த்தைகள் ஒன்றே தான். ஆனாலும் அப்போது ''பாயைச் சுருட்டிக்கொண்டு கிளம்பு'' என்றவர் இப்போது அதற்கு நேர் எதிராக'' பாயை விரிச்சுண்டு படுத்துக்கோ'' என்று பகவானிடம் சொன்னார்.

*கணி கண்ணன் போக்கொழிந்தான், காமரு பூங்கச்சி*
*மணிவண்ணா! நீ கிடக்க வேண்டும்! - துணிவொன்றிச்*
*செந்நாப் புலவோன் யான் செலவொழிந்தேன்,*
*நீயுமுன்றன் பைந்நாகப் பாய் விரித்துக் கொள்.*

முன்னே ''நீ கிடக்க வேண்டா'' - ''இப்படிப் படுத்துண்டு கிடக்காதே'' என்றவர் இப்போது ''நீ கிடக்க வேண்டும்'' என்கிறார். ''நன்றாக உன் கிடந்த திருக்கோலத்திலேயே சயனம் பண்ணிக்கோப்பா''!

முன்னே ''யான் செல்கின்றேன்'' என்றவர் இப்போது ''யான் செலவொழிந்தேன்'' என்கிறார். கணி கண்ணன் போக்கொழிந்ததால்



இவரும் செலவொழிந்து விட்டார். 'செலவு' என்றால் செல்வது. 'வரவு', 'செலவு' என்று ரூபாயைச் சொல்லும்போது மட்டும் இந்த வார்த்தையைச் சொல்கிறோம் ''ரொம்ப செலவாகிறது'' என்றால் கையை விட்டு ரொம்ப ரூபாய் சென்று விடுகிறது, போய் விடுகிறது என்று அர்த்தம்.

கணி கண்ணனும் போக்கொழிந்தாச்சு. நானும் செலவொழிந்தாச்சு, இனி மேலே இங்கேதான் இருக்கப் போகிறோம். இப்போது ஊருக்கு நேர்ந்த உத்பாதத்தைப் பார்த்து விட்டதால் இனி மேலே ராஜாவோ, ஜனங்களோ யாரும் நாங்கள் இந்த ஊரை விட்டுப் போகிற மாதிரி செய்ய மாட்டார்கள். அதனால், இங்கேயே இருந்து கொண்டு இருப்போம். ஆகையினால் நீயும் இனி மேல் உன் சேஷ பர்யங்கத்தை விரித்துக்கொண்டு நிம்மதியாகப் படுத்துக்கொள்ளலாம். ஐயோ பாவம்! உன்னைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. பெருமாளாகப்பட்ட நீ இந்த சின்ன ஆள் என்ன சொல்லுவேனோ, பண்ணுவேனோ என்றா சயனத்தைச் சுருட்டி வைத்துக்கொண்ட கையோடேயே இன்னமும் நின்று கொண்டிருக்கிறாய்? அதை விரித்துக் கொள்ளப்பா!

*''பைந்நாகப் பாய் விரித்துக் கொள்''!*

இப்படி அவர் வாய்ப்படச் சொன்ன அப்புறந்தான் ஸ்வாமி மறுபடி ஆதிசேஷனை மெத்தையாகப் போட்டுக்கொண்டு படுத்துக்கொண்டார்.

அவர் தான் காஞ்சிபுரத்தின் அநேக தேவாலயங்களில் ஒன்றில் இருக்கிற யதோத்காரி, **சொன்ன வண்ணம் செய்த பெருமாள்.**

காஞ்சிபுரத்தில் பச்சை வண்ணப் பெருமாள், பவள வண்ணப் பெருமாள் என்றெல்லாம் பகவான் இருக்கிறார். இவரோ, சொன்ன வண்ணம் செய்த பெருமாள்.

*எதற்குக் கதை சொன்னேன் என்றால், சிஷ்யன் அவனே பகவானிடம் போகவேண்டும் என்றில்லை. அவன் குருவிடத்தில் பூர்ண விச்வாசம் வைத்து விட்டால் அவர் பகவானையே அவன் கிட்டே போகப் பண்ணி விடுவார். அவன் போகிற இடமெல்லாம் பின்னோடேயே பகவானும் போய் ரக்ஷிக்கும்படியாகப் பண்ணி விடுவார். சிஷ்யனுக்காக குரு ஆர்டர் போட்டு விட்டால், பகவானே நில் என்றால் நிற்பான், ஓடு என்றால் ஓடுவான், படு என்று அவராகச் சொன்னால்தான் படுப்பான்.*

இதைத் தெரிந்து வைத்துக்கொண்டுதான் சில பேர் குருவே போதும், தனியாக ஒரு ஈச்வரன் வேண்டாம் என்றிருந்தது. ●

# ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து - 13

(பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் அருணாசல அக்ஷர மண மாலை - ஸ்ரீ குருஜியின் உபன்யாஸத்திலிருந்து சில பகுதிகள் - தொடர்ச்சி)

*ஆருக்காவெனை யாண்டனை யகற்றிடி*
*யகிலம் பழித்திடு மருணாசலா.*

உலகத்தில் பகவானை அடைய யோகிகள் யமம், நியமம், ஆஸனம், ப்ராணாயாமம், ப்ரத்தியாகாரம், தாரனை, த்யானம், ஸமாதி என்ற அஷ்டாங்க யோகத்தைக் கைக்கொண்டு முயற்சிக்கிறார்கள். மூட பக்தர்கள் கதறி அழுதும், நவ விதமான பக்தி சாதனங்களை கைக்கொண்டும் பகவானை அடைய முயல்கின்றனர். சிலர் பகவானை அடைய கடுமையான விரதம் கைக்கொள்கின்றனர். ஆனால் மேற்பட்டவர்களுக்குக் கூட பகவான் அவ்வளவு சுலபத்தில் க்ருபை செய்வதைக் காணோம். நானோ உன்னை அடைய ஒரு தவமும் முயற்சிக்கவில்லை. எந்த யோக சாதனைகளையும் மேற்கொள்ள வில்லை. கதறி அழவும் இல்லை. இப்படிப்பட்ட என்னை நீ தடுத்து ஆட்கொண்டதன் அழகுதான் என்ன? என்று அழகாக இச்செய்யுளில் எடுத்து உரைக்கின்றார்.

அருணாசலேஸ்வரனால் தடுத்து ஆட்கொள்வதற்கு முன்பு பகவான் ''ஆத்மா'' என்ற சப்தத்தைக் கூட கேள்விப்படவில்லை. ஆகவே அழகாக ''ஆருக்காவெனை யாண்டனை'' - உன்னை அடைய நான் அழுதேனா? உன்னை கூப்பிட்டது யார்? ஒரு கால் என் குலத்தில் பிறந்த முன்னோர்கள் செய்த தவ பலத்தினால் என்னை ஆட்கொண்டாயோ? என்று கேட்கிறார்.

பிறகு இப்படி நாம் சொல்வதாலோ, நினைப்பதாலோ அல்லது வேறு ஒரு காரணத்தினால் தடுத்து ஆட்கொண்ட பகவான் தன்னை கைவிட்டு விடுவானோ என்று நினைத்து ''அகற்றிடில்'' என்று உரைக்கிறார்.

அடுத்ததாக இப்படி நீ என்னை தடுத்து ஆட்கொண்டு கைவிட்டு விடுவாயானால் உலகத்தில் உள்ளோர் உன்னை பழித்திடுவார்கள். உலகில் உள்ள சாமான்யர்கள் பலவிதமான ப்ரார்த்தனையை உன்னிடம்

செய்தும், அது நிறைவேறாததும், தங்களுடைய நன்மைக்கே என்று புரியாமல், அறியாமையினால் உன்னை பழிக்கின்றனர். ஆனால் இப்படி என்னை தடுத்தாட்கொண்டு, கைவிடுவாயேயானால் சான்றோர்களும் உன்னை பழிப்பார்கள் என்பதை " அகிலம் " என்ற பதத்தால் நயம்பட கூறி உள்ளார்.

இன்னொரு விதத்தில் இதை சுவைபட கூறுவோமாகில், உன்னை அடைவதற்காக ஒரு ப்ரயத்தனமும் படாத என்னை நீ தடுத்து ஆட்கொள்வதாலும் உன்னை உலகில் உள்ளோர் பழிப்பர் என்றும் கொள்ளலாம். அப்படி உன்னை அழைக்காதவர்கள் விஷயத்தில் அருள் செய்வாயாகில் உனக்கும் உலகத்தில் உள்ளவர்கள் போல் "வேண்டுவதுவும் வேண்டாததுவும்" இருப்பதுபோல் ஆகி விடும்.

இறைவனுக்கு தன்னை அண்டுபவர்கள் விஷயத்தில் இவன் இன்ன குலத்தை சேர்ந்தவன் என்றோ இன்ன தேசத்தை சேர்ந்தவன் என்றோ, இவன் அறிவின் திறமையையோ சர்வ சரீர ஆரோக்யத்தையோ, ரூப லாவன்யத்தையோ, செல்வத்தின் தன்மையையோ ஏன் - சாதனை பலத்தையோ கூட பார்ப்பது இல்லை.

தன்னை அடையவேண்டும் என்ற விஷயத்தில் அவனுக்கு உள்ள ஆர்வத்தையும், தீவிரத்தையும் பார்த்தே "அருள்" செய்கிறான் என்பது சான்றோர்கள் வாக்கு. தடுத்து ஆட்கொண்ட பகவான் கைவிட்டால் தான் என்ன?

உலகத்தில் அற்ப சுகத்தை அடைவதற்காக மனிதர்கள் "அல்லும் பகலும்" அயராது பாடுபடுகிறார்கள். அப்படி பாடுபட்டும் சுகத்தை அடைந்தவர்களாகத் தெரியவில்லை. காரணம் என்ன?

சுகம் என்பது எங்கிருந்து வருகிறது என்பதை அறியாததே காரணம். சுகம் என்பது எங்கிருந்தோ வந்து நம்மை ஆட்கொள்ள வேண்டியது இல்லை. சுகம் என்பது அடையப்படவேண்டியதும் இல்லை.

நம்முடைய உண்மையான இயல்பே ஆனந்தமாகும். இதற்கு நாம் நம்முடைய விவேகத்தால், அறியாமையால், வரும் துக்கத்தை விலக்கி விட்டாலே போதும். அப்படி நாம் விலக்குவதற்கு சிறிதும் மாயக்கலப்பில்லாத இறைவனின் அருள் தேவையாய் உள்ளது என்பதை உணர்ந்த எவர்தான் தன்னை இறைவன் கைவிட்டு விடுவானோ? என்று நினைத்து கலங்காமல் இருக்கமுடியும். உலகத்தில் பத்து ரூபாய் மதிப்புள்ள எழுது கோல் முதல், பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள

(தொடர்ச்சி ... 31-ம் பக்கம்)

# ரஸ ரூபமானது பக்தியே

பக்தியை முதலில் ஸாதன ரூபமாக அனுஷ்டிக்க வேண்டியதே. மனது ஈடுபடாமல் செய்யும் நாம ஜபமோ, கீர்த்தனமோ, பூஜையோ பிரயோஜனமில்லை தான், ஆனால் ஈடுபாடு என்பது எப்படி வரும்? தானாகவோ, திடீர் என்றோ வரும் விஷயமில்லை இது. திடீர் என்று வருவது, வந்த மாதிரியே போயும் விடலாம். ஆகவே நமக்கு மனது ஈடுபடுகின்றதோ இல்லையோ தினமும் ஸ்நானம் செய்வது போன்றும், உடை உடுத்திக்கொள்வது, சாப்பிடுவது போன்றும் ஒரு இயந்திர கதியிலாவது இத்தனை நாம ஜபம், பாராயணம், கீர்த்தனம், வந்தனம் என்று செய்து வரவேண்டும். இப்படி விடாமல் செய்து வந்தோமானால் கொஞ்சம் கொஞ்சமாக நமக்கு ஈடுபாடு வந்து மனதில், உருக்கமும் ஒரு முக முனைப்பும் ஏற்படுவதைக் காணலாம்.

விடாமல் செய்து வரும் ஸாதனைகளினால் மனதில் உள்ள வாசனைகள் குறையக் குறைய ஸாத்வீகமான சிந்தனைகள் மேலோங்கி உருக்கம் ஏற்படும். எப்பொழுது மனதில் ராஜஸம், தாமஸம் போன்ற வாசனைகள் எல்லாம் அழிந்து தெய்வ விஷயமான ஸாத்வீகமான வாசனைகள் மட்டும் மேலோங்கியுள்ளதோ அப்பொழுது தான் ஒருவனுக்கு த்யானத்தில் பலவிதமான காட்சிகள் கிடைக்கின்றன. பாகவதத்தில் பிரஹலாதன் நவ விதமான பக்தி ஸாதனங்களை 'ஸ்ரவணம், கீர்த்தனம், ஸ்மரஸம், பாத ஸேவனம், அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம், ஸக்யம், ஆத்ம நிவேதனம்' என்று குறிப்பிடுகின்றான்.

இதில் ஏதோ ஒரு ஸாதனையை மட்டும் கைக்கொண்டாலும் போதும். தனக்கு ரிஷி குமாரனுடைய சாபத்தினால் மரணம் சமீபத்திலிருக்கின்றது என்று தெரிந்து கொண்ட பரிஷித் ராஜாவோ அந்த சாப விமோசனத்திற்காக எவ்வளவோ பேர் எவ்வளவு விஷயங்களை எடுத்துக் கூறியும் கேட்கவில்லை. விவேகியாய் இருந்ததினால் பிறந்தவன் ஒரு நாள் இறக்கத்தான் வேண்டும். பிறப்பும் இறப்பும் தவிர்க்க முடியாதவை. மரணம் என்பது யாருக்கு எப்பொழுது எப்படி வரும் என்று கூறமுடியாமல் உள்ளது. எவ்வளவோ பேர் உலகில் வாழ ஆசைப்பட்டும் முடியாமல் இளம் வயதிலேயே காலமாகின்றனர். வயதாகி உடல் தளர்ந்து எல்லாவற்றிற்கும் பிறரையே எதிர்பார்க்கும் நிலைமையில் உள்ளவர்கள் மரணத்திற்காக காத்திருக்கின்றனர். ஆனால் அவர்கள் விரும்பியவாறு அவர்களுக்கும் அது வருவதில்லை. சிலர் வாழப்பிடிக்காமல், அல்லது உலகுடன் போராடி வாழ மனோ தைரியம் இல்லாமல் சரீர ஹத்தி செய்து கொள்கின்றனர். ஆகவே தனக்கு மரணம்

இத்தனை நாட்களில் வரப்போகின்றது என்று தெரிந்துள்ளதே பெரிய நன்மைதான் என்று நினைத்து மஹாத்மாவான சுகாச்சார்யாளிடம் ஸ்ரீமத் பாகவதத்தை சப்தாஹமாக சிரவணம் செய்து சத் கதியை அடைந்தான். ஆகவே ஸ்ரவண மாத்திரத்தினால் மட்டுமே பகவானை அடைய முடியும் என்பதற்கு பரிக்ஷித்தே பிரமாணம்.

நம்முடைய நாடு இன்றைக்கு இருக்கும் நிலையைப் பார்த்து ஸாதுக்கள் அநேகம் பேர் கவலைப்படுகின்றார்கள். எங்கும் பொய், பித்தலாட்டம், ஊழல், வன்முறை போன்றவைகள் ஸர்வத்திலும் வியாபித்துள்ளதைப் பார்த்து அநேகம் பேர் கவலை கொண்டு நாளுக்கு நாள் மோசமாகிக்கொண்டே போகின்றதே, இதற்கு முடிவு தான் என்ன? என்று கேட்பார்கள்.

நான் சொல்வேன், கவலைப்படவேண்டாம், பாரத தேசத்தை ஒரு காலும் பகவான் கை விடமாட்டான், வெகு சீக்கிரத்தில் ஒரு மஹா புருஷர் வந்து எல்லாவற்றையும் சரி செய்து விடுவார் என்று. நான் இப்படி சொல்லியும் அவர்களுக்கு நம்பிக்கை வருவதில்லை. காரணம் அதற்கான அறிகுறியே தென்படவில்லை என்பதுதான் அவர்களின் சந்தேகத்திற்கான காரணம்.

சதி பதிகளுக்கு விவாஹம் ஆகி உசித காலத்தில் குழந்தை பிறந்தால் இது இயற்கைதானே என்று தோன்றும். இது தெய்வத்தின் அருள் என்றால் மனது ஏற்காது. ஆனால் சதி பதிகளுக்கு விவாஹம் உசித காலத்தில் ஆகியும் பல வருடங்கள் குழந்தை பிறக்காமல் இருந்து எவ்வளவோ வைத்தியம், ஹோமம், பிராயசித்தம், பரிகாரம் என்று பண்ணியும் பலனில்லாமல் இனிமேல் இதற்கு வழியே இல்லை என்ற நிலையில் அவர்கள் தாபத்துடன் உள்ளனர்.

பிறகு ஒரு மஹாத்மாவை ஸேவிக்கச் சென்றார்கள். அவர் ஆசீர்வாதம் செய்து ஒரு பழம் கொடுத்து சாப்பிடச் சொன்னார். இந்த நிலையில் தெய்வத்தின் அருள் நமக்கு நன்றாக புரிகின்றது அல்லவா!

அது போல நம் நாடு திருந்துவதற்கான அறிகுறிகள் ஏற்பட வில்லை என்ற கவலையே வேண்டாம். தெய்வ சக்தியினால் சாதிக்க முடியாததே இல்லை. ***அப்பேர்ப்பட்ட ஒரு மஹா புருஷர் வரத்தான் போகின்றார். முடியாது அன்று நாம் நினைப்பதையெல்லாம் முடித்து வைப்பார்.*** இதைப்பற்றி ஏன் எழுத வந்தேன் என்றால் சரித்திரத்தை எடுத்துப்பார்த்தால் பாரத தேசம் நாம் இப்பொழுது இருக்கும் நிலையைக் காட்டிலும் மோசமான பல சூழ்நிலைகளைச் சந்தித்துள்ளது. அது மாதிரியான ஒரு கால கட்டத்தில் தான் **ஸமர்த்த ராமதாஸர்** அவதரித்தார்.

மார்கழி மூலம் இவருடைய ஜன்ம தினம். அனுமாருடைய அம்சமாகவே காணப்பட்டார். இவருடயை தபோ பலத்தினால் தான் சீர்கெட்டிருந்த பாரத தேசத்தை சத்ரபதி சிவாஜி சரிப்படுத்தினான்.

ஸமர்த்த ராமதாஸர் அப்படி என்ன தபஸ் செய்தார்? அவருக்குத் தெரிந்ததெல்லாம் ''ஓம் ஸ்ரீராம் ஜயராம் ஜயராம்''. இந்த மந்திரத்தையே பல கோடி கணக்குகளில் ஜபம் செய்து சித்தி பெற்றவர் அவர். ஒரு நாமத்தை விடாமல் ஸ்மரணம் அதாவது ஜபம் செய்து சித்தியடைந்தவர் இவர். இவர் போலவே இன்றும் அநேஹ மஹாத்மாக்கள் நாம ஜபம் என்ற சாதனையை மட்டுமே கைக்கொண்டு பலன் அடைந்துள்ளனர்.

**யோக பரமானந்தர்** என்ற ஒரு பக்தர் பண்டரீபுரத்தில் வஸித்து வந்தார். அவர் நித்யம் சந்திரபாக நதி தீரத்தை அடைந்து, கீதையில் உள்ள ஒவ்வொரு ஸ்லோகத்தையும் சொல்லி முடிவில் 'ஸ்ரீமதே பாண்டுரங்காய நமஹ' என்று தன்னுடைய ஸர்வ அங்கங்களும் பூமியில் பட விழுந்து நமஸ்கரிப்பார். இப்படியாக இவருடைய வந்தன பக்தியை விடாமல் ஒவ்வொரு நாளும் செய்து வந்தார்.

ஒரு சமயம் பண்டரீபுரத்தில் நல்ல மழை பெய்தது. யோக பரமானந்தர் வாழ்ந்து வரும் இடமோ ஒரு மிகவும் சாதாரணமான குடிசை வீடு. மழையினால் யோக பரமானந்தர் வீட்டில் எல்லா இடமும் மழையினால் நனைந்து விட்டது. மூலையில் ஒரு சிறிய இடம் மட்டும் ஒழுகாமல் இருந்தது. அவ்விடத்தில் அவர் ஒதுங்கி இருந்தார். அந்த சமயம் பல விலையுயர்ந்த துப்பட்டிகளை விற்கும் ஒருவன் வீதியில் சென்று கொண்டிருந்தான். மழைக்காக அவன் யோக பரமானந்தர் வீட்டின் பக்கம் ஒதுங்கினான். அவன் தன்னிடம் இருக்கும் விலையுயர்ந்த துப்பட்டிகள் மழையில் நனைந்தால் வியாபாரம் பெரிதும் பாதிக்குமே என்று கவலையுற்றான். அதை கண்ணுற்ற யோக பரமானந்தர் தான் மழையில் நனைந்தாலும் பரவாயில்லை என்று எண்ணி தான் ஒதுங்கியிருந்த இடத்தை வியாபாரிக்கு விட்டுக் கொடுத்துவிட்டு மழையில் நனைந்தவராக இருந்தார்.

சிறிது நேரத்தில் மழையும் நின்றது. தன்னுடைய வியாபாரத்தை கவனிக்க வியாபாரி கிளம்பி விட்டான். அது ஸமயம் யோக பரமானந்தரின் உதார குணத்தை சிந்தித்து கண்ணீர் விட்டபடியே மிகவும் அழகான உயர்ந்த துப்பட்டியை யோக பரமானந்தரிடம் பிரியத்துடன் ஸமர்ப்பித்தான்.

அந்த துப்பட்டியை அணிந்து கொண்டு வழக்கம் போல் சந்திர பாக நதி தீரத்தை அடைந்தார். வந்தனம் செய்ய ஆரம்பித்தவுடன் அவருடைய

சிந்தனையெல்லாம் தான் ஸர்வ அங்கமும் பூமியில் பட ஸேவிப்பதால் தான் அணிந்துள்ள உயர்ந்த அழகான துப்பட்டி அழுக்கு அடைந்து விடுமோ என்பதிலேயே இருந்தது. வீட்டிற்கு வந்தவுடன் தான் இது நாள் வரை தொடர்ந்து செய்து வந்த வந்தன பக்தி இந்த ஒரு துப்பட்டியினால் தடைபட்டு விட்டதே என்று கவலையுற்று தன் மீதே கோபம் அடைந்தவராக இரண்டு மாடுகளை ஏர் முனையில் (உழுவது போல்) கட்டி தன்னையும் அதில் பிணைத்துக் கொண்டார். மாடு இவரை மேடு, பள்ளம், கல், முள், சாக்கடை நீர் எல்லாவற்றிலும் இழுத்துக் கொண்டு செல்ல ஆரம்பித்தது.

அது ஸமயம் பாண்டுரங்கன் அங்கு ப்ரத்யக்ஷமாகி அவரை விடுவித்தான். இத்தனை நாள் செய்து வந்த வந்தன பக்தியின் மூலம் உன் உடல், பொருள் , ஆவி எல்லாம் சமர்ப்பணம் செய்து விட்டாய். எனக்கு சொந்தமான இவ்வுடலை நீ இப்படி வருத்திக்கொள்வதைக் கண்டு என்னால் ஸகிக்க முடியவில்லை என்று கூறி பலவாறு அவரை ஸமாதானப் படுத்தினான். ஆகவே நவ விதமான பக்தி ஸாதனங்களில் வந்தனம் என்ற பக்தி ஸாதனத்தின் மூலமாகவே பகவானை அடைந்தவர் யோக பரமானந்தர். (தொடரும்)

---

27-ம் பக்க தொடர்ச்சி

பொருள்கள் வரை நாசம் ஏற்படும் பொழுது கலங்குகின்றனர் உலக மக்கள். பத்து நாட்களே பழகியவர் ஆனாலும் பல காலம் பழகியவர் ஆனாலும், ஒருவருடைய பிரிவு உலகத்தவரை வாட்டி எடுக்கின்றது. இப்படி இருக்கையில், இறைவனுக்கும் தனக்கும் சம்பந்தம் உண்டு, இறைவன் தான் அழியாத நிதி என்பதை தெரிந்து கொண்டால் யார் தான் அவனுடைய பிரிவை தாங்க முடியும்?

நாம் அற்ப காசுகளே செலவழித்து, தாழ்ந்த உலோகத்தால் ஆன ஒரு ஆபரணம் வாங்கி, அது ஒரு கால் நம் கை நழுவி போகுமானால், அதைத் தேட பெரிதாக முயற்சி எடுப்பது இல்லை. பல கோடி ரூபாய் மதிப்புள்ள உயர்ந்த ஆபரணம் கை நழுவி போகுமானால் சதா அதைப்பற்றியே சிந்தித்து தேகம் வாடி, அதை மீண்டும் அடைய பல விதத்திலும் முயற்சி செய்கின்றனர்.

அது போல நமக்கு சாதுக்கள் சங்கமும் இறைவனின் அருளும் கிடைத்து நம்முடைய உதாசீனத்தால் கை நழுவி போகுமானால், நாம் அலட்சியமாய் இல்லாமல் எப்பாடுபட்டாவது முயற்சி எடுத்து மீண்டும் சாதுக்களின் சங்கத்தையும் இறைவனது அருளையும் பெறவேண்டும்.

தொகுப்பு : **முரளீதர தாஸன்.** (தொடரும்)

# செய்திகள்

### ஜூலை 26ந் தேதி

மாதாந்திர *'அத்வைத ஸித்தி வாக்யார்த்த ஸதஸ்'* அனுஷ நக்ஷத்திரத்தன்று *ப்ரேமிக பவனில்* நடைபெற்றது.

### ஜூலை 30ம் தேதி

***வியாஸ பூஜை, ப்ரேமிக பவனில்*** கொண்டாடப்பட்டது.

### ஆகஸ்ட் 4ந் தேதி முதல் 8ந் தேதி வரை

சென்னை மயிலாப்பூர் *ஆர்.ஆர். ஸபாவில்* பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் *'அக்ஷர மண மாலை' மூன்றாம் பாகம்* - ஸ்ரீ குருஜியின் உபன்யாஸம் நடந்து முடிந்தது. வழக்கப்படி பக்த ஜனங்கள் நிறைந்த அளவில் வந்திருந்து ச்ரவணம் செய்து மகிழ்ந்தார்கள்.

### ஆகஸ்டு 22ந் தேதி

ஆவணி மாத ***'அத்வைத ஸித்தி வாக்யார்த்த ஸதஸ்'*** அனுராதா நக்ஷத்திரத்தன்று *ப்ரேமிக பவனில்* நடைபெற்றது.

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

### ஆகஸ்டு 31ந் தேதியும், செப்டம்பர் 1ந் தேதியும்

*திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாஸ்ரமத்தின்* நிகழ்ச்சிகளில் ஸ்ரீ குருஜி கலந்து கொள்கிறார்கள்.

### செப்டம்பர் 3ந் தேதி

சென்னை *கோபாலபுரம் 'ஸ்ரீ கிருஷ்ண பக்த ஸங்கம்'* சார்பில் ஸ்ரீ குருஜி 'ஸ்ரீ கிருஷ்ண ஜனனம்' பற்றி உபன்யாஸம் நிகழ்த்த இசைந்துள்ளார்.

### செப்டம்பர் 5ந் தேதி முதல் 15ந் தேதி வரை

***'கோகுலாஷ்டமி'*** வைபவம் *மதுரபுரி ஆஸ்ரமத்தில்* நடைபெற உள்ளது.

### செப்டம்பர் 18ந் தேதி - அனுஷ நக்ஷத்ரம்

மாதாந்திர *'அத்வைத ஸித்தி வாக்யார்த்த ஸதஸ்'* வழக்கம் போல் சென்னை *ப்ரேமிக பவனில்* நடைபெறும்.

### செப்டம்பர் 20ந் தேதி முதல் 26ந் தேதி வரை

சென்னை ஆழ்வார்பேட்டையிலுள்ள *'வீனஸ் காலனி'யில் 'பக்த விஜயம்'* பற்றி ஸ்ரீ குருஜி உபன்யாஸம் செய்கிறார்.

**மங்களானி பவந்து**

# மதுரமுரளி

Registered as Newspaper in India

R. No. 62828/95
Single Copy Rs. 5/-

Regd. No. TN/MS/(S)/714
Annual Subs. Rs. 60/-

| வேணு : 2 | செப்டம்பர் 1996 | கானம் : 2 |
|---|---|---|





Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Madras 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Madras - 600 014. Editor : S. Sridhar